நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை குற்றத் தடுப்புத் தொடர்கள்

# உங்கள் பற்று/கடன் அட்டைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும்

மோசடியிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும்

நாம் ஒரு பணமில்லா சமுதாயத்தை நோக்கிச் செல்லும்போது, பணத்துக்கு மாற்றாக பற்று அட்டை மற்றும் கடன் அட்டைகளைப் பயன்படுத்துவது வழக்கமானதாகும்.

உங்கள் அட்டைகள் மிகவும் தனிப்பட்ட தகவல்களை வைத்திருக்கின்றன. அவை பாதுகாப்படவில்லையென்றால் நகலெடுக்கப்படவோ அல்லது திருடப்படவோ முடியும். இது உங்கள் நிதியையோ அல்லது அடையாளத்தையோ குற்றவாளிகள் அணுக அனுமதிக்கக்கூடும்.

இந்த வகையான குற்றத்திலிருந்து நமது அட்டைகளைப் பாதுகாத்துக் கொள்ள உதவும் வகையில் நாம் அனைவரும் பின்பற்ற வேண்டிய சில எளிய வழிமுறைகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

## உங்கள் அட்டையைப் பாதுகாத்துக் கொள்ளவும்

- உங்கள் பற்று அட்டை மற்றும் கடன் அட்டைகளை உங்கள் பார்வையிலிருந்து அகற்ற **வேண்டாம்**.
- பரிவர்த்தனைகள் உங்கள் கண்முன்னால் செய்யப்படவேண்டும் என **வற்புறுத்தவும்**.

## உங்கள் சொந்த அடையாள எண்ணை (PIN) பாதுகாத்துக் கொள்ளவும்

- உங்கள் PIN-ஐ யாருடனும் பகிர்ந்து கொள்ள **வேண்டாம்**.
- உங்கள் PIN-ஐ உள்ளீடு செய்யும்போது கையால் **மறைத்துக் கொள்ளவும்**.
- உங்கள் PIN-ஐ அடிக்கடி **மாற்றவும்**.

## உங்கள் இணையக் கணக்கைப் பாதுகாத்துக் கொள்ளவும்

- மாற்று அட்டைகளையும், PIN தகவல்களையும் பதிவு செய்யப்பட்ட அஞ்சலில் அனுப்புமாறு அல்லது கிளை அலுவலகத்துக்குச் சென்று எடுக்குமாறு **கோரிக்கை வைக்கவும்**.
- வங்கித் தகவல்களையும், விலைப் பட்டியல்களையும் மற்றும் காலாவதியான/தேவையற்ற அட்டைகளையும் **பாதுகாப்பாக** அழிக்கவும். அனைத்து ஆவணங்களையும் சிறு துண்டுகளாகக் கிழித்துவிடுவது நலம்.
- **எப்போதும்** நீங்கள் வாங்கும் பொருட்களை உங்கள் நிதி அறிக்கையுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கவும். எதுவோ சரியில்லை என்பதைப் போல் நீங்கள் எதையாவது பார்க்க நேர்ந்தால், உடனடியாக உங்கள் நிதி நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## இணையத்தில் உங்கள் அட்டையைப் பாதுகாத்துக் கொள்ளவும்

- இணையத்தில் வாங்கும்போது, பரிந்துரைக்கப்பட்ட மின்னணு வழி பணம் செலுத்தும் வசதிகளைப் **பயன்படுத்தவும்**.
- உங்களது கருவிகளில் வைரஸ் தடுப்பு/தீங்குநிரல் தடுப்பு (anti-malware) பாதுகாப்பை **நிறுவி** அதைப் பராமரிக்கவும்.

இணையவெளி (cyber) தொடர்பான குற்றத்தில் நீங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக நீங்கள் நம்பினால் – உடனடியாக அதைப் பற்றி **www.acorn.gov.au** என்ற இணையதளத்தில் புகார் தெரிவிக்கவும்.

***மேலதிகக் குற்றத் தடுப்புத் தகவல்களுக்கு www.police.nsw.gov.au என்ற எங்களது இணையதளத்துக்குச் செல்லவும்.***

NSW Police Force | NSW GOVERNMENT Justice | policebank member owned banking | Westpac

**Triple Zero (000)**
நெருக்கடியான அல்லது உயிருக்கு ஆபத்தான நிலைமையில்.

**Police Assistance Line (131 444)**
நெருக்கடியில்லாத நேரங்களில்.

**Crime Stoppers (1800 333 000)**
குற்றம் பற்றிய தகவல்களை வழங்க. இதில் பெயர் வெளியிடப்படமாட்டாது.